***வாழ்த்தி மகிழ்வோம்!***

மருத்துவம் என்பதின் மகத்துவம் சூடி,
அருந்தவப் பணியாய் அகந்தனில் ஏற்றி,
உருபெறும் கலனாய் உன்னத நிலையாய்,
மருவிலா மனமாய் மகிழ்ந்தே தொடர்ந்து,

மக்களின் மனத்தில் மகுடமாய் நிறைந்து,
பக்குவம் கொண்டு பண்பால் உயர்ந்து,
சிக்கல் தனையும் சிரித்தே அவிழ்த்து,
எக்கணமும் இடையறாப் பணியும் கண்ட,

எங்கள் அன்பின் பெருந்தகை மருத்துவர்,
தங்கநிகர் அன்னல், **தியாகராஜனு**க்கு,
சிங்கமென **இந்திய மருத்துவக் கழகம்**
அங்கையில் அளித்த வாழ்த்தில் மகிழ்ந்தோம்!
அன்புடன்,
**கு.ப.அசோகன்** (கவிஞர் **கவிவளவன்**)
சென்னை – 600 073

